# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 4/2013</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி** - **12.04.2023**

**பெயர்** - **நந்தினி**

**க/பெ** - **ராஜேந்திரன்**

**சாட்சி** - **PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 01.53 p.m.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>-**

12. வழக்கு சொத்தில் மூன்று போகம் பயிர் செய்யும் நிலமா என்றால் ஆமாம். தாவா சொத்து தாவா கிராமத்தில் அதிக மதிப்புள்ள நிலம் என்றால் அதன் மதிப்பு குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து என்படி அதிக மதிப்புள்ள நிலம் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த தேதியில் தாவா சொத்தின் ஒரு செண்ட் நிலம் எவ்வளவு மதிப்பு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. என்படி தாவா சொத்து என்ன மதிப்பு என கூறி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. தாவா தாக்கல் செய்த காலத்தில் ஒரு செண்ட் நிலம் <u>ரூ.20,000./</u> மதிப்பு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா காலத்தில் தாவா சொத்தின் மதிப்பு என்ன என்பது மற்ற வாதிகளுக்கு தான் தெரியும் என்றும் எனக்கு தெரியாது என்று கூறினால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

13. தாவா சொத்தின் மதிப்பை குறைவாக மதிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்

என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வழிகாட்டி மதிப்பினை வாங்குவதற்கு முயற்சி மேற்கொண்டேனா என்றால் இல்லை. அந்த வழிகாட்டி மதிப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் மதிப்பினை நான் ஏற்றுக்கொள்வேனா என்றால் ஏற்றுக்கொள்வேன். மேற்படி வழிகாட்டி மதிப்பை விட தாவா நிலத்தில் சந்தை மதிப்பு அதிகம் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு சொத்தின் உண்மை மதிப்பினை கூறும் நிலையில் இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கினை நடத்த ஆள்வரை இருக்காது என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 02.15 p.m.**